# உபசரிப்பு என்ற உவகையூட்டும் கலை (28:1-15)

*பகலின் வெப்பமான நேரத்தில் ஆபிரகாம் தம்முடைய கூடார வாசலில் இளைப்பாறிக் கொண்டிருந்தார். அவர் தமது கண்களை ஏறிட்டுப் பார்க்கையில் எங்கிருந்து வந்தார்கள் என்றறியப்படாத மூன்று அந்நியர்களைக் கண்டார். விரைவாய் அவர் எழுந்து அவர்களை வணங்கி, பின்வருமாறு கூறினார்:*

> *ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நீர் உமது அடியேனை விட்டுக் கடந்து போக வேண்டாம். கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரட்டும், உங்கள் கால்களைக் கழுவி, மரத்தடியில் சாய்ந்து கொண்டிருங்கள். நீங்கள் உங்கள் இருதயங்களைத் திடப்படுத்தக் கொஞ்சம் அப்பம் கொண்டு வருகிறேன்; அப்புறம் நீங்கள் உங்கள் வழியே போகலாம்; இதற்காகவே அடியேன் இடம்வரைக்கும் வந்தீர்கள் (ஆதி. 18:3-5).*

*வந்தவர்களின் பாதங்களை ஒரு ஊழியக்காரன் கழுவிக் கொண்டிருக்கையில், ஆபிரகாம் சாராளிடத்தில் அப்பம் தயாரிக்கும்படி கூறினார். அவர் மந்தையிடம் ஓடி, தமது சிறந்த கன்றுக்குட்டியைக் கொண்டு வந்து சமைக்கும்படித் தம் வேலைக்காரனிடம் கூறினார். விருந்து தயாராகும் வேளையில் அந்த மனிதர்களின் பொழுது போவதற்காக அவர்களிடம் அவர் சென்றார். விருந்து வேளையில், அந்த அந்நியர்கள் ஆபிரகாமும் சாராளும் குழந்தை பெறும் வயதைக் கடந்து விட்டிருந்தாலும் கூட, சாராள் அடுத்த ஆண்டில் ஒரு குழந்தை யைப் பெறுவாள் என்று அறிவித்ததன் மூலம் ஆபிரகாமைத் திகைப்படையச் செய்தார்கள். உணவிற்குப் பின், நல்ல*

*விருந்தளிப்பவர்கள் செய்வது போலவே ஆபிரகாம் அவர்களுடன் சாலையில் நடந்து செல்லத் தொடங்கினார். அவர் அவ்வாறு செய்கையில், அவர்கள் தேவனிடம் இருந்து வந்த செய்தியாளர்கள் என்று கண்டறிந்தார் (ஆதி. 18:16-33)!*

*பழைய ஏற்பாட்டில் உள்ள இந்த நிகழ்ச்சியானது புதிய ஏற்பாட்டில் முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது: "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதனாலே சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்டு" (எபி. 13:2).*

*உபசரிப்பு என்பது வேதாகமத்தில் ஒரு முக்கியமான போதனையாகும். நடைமுறைக் கிறிஸ்தவம் பற்றி கூறும் மாபெரும் அதிகாரமான ரோமர் 12ல் பின்வரும் வார்த்தைகளை பவுல் உள்ளடக்கினார்: "பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள்" (ரோமர் 12:13). உபசரிக்கிறவர்களாய் இருக்க வேண்டும் என்பது மூப்பர்களுக்குரிய தகுதிகளில் ஒன்றாகும் (1 தீமோ. 3:2; தீத்து 1:8). "முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்" (1 பேது. 4:9) என்று பேதுரு கூறினார்.*

*உபசரிப்பு என்பதன் உண்மையான அர்த்தம் என்னவென்று நாம் அறிகின்றோமா? தனிநபர்கள் தங்கள் இல்லங்களில் மற்றவர்களை வரவேற்கும் போது, அவர்களை (தனிநபர்களை) "உபசரிப்புத் தன்மை உள்ளவர்கள்" என்று நாம் அழைக்கின்றோம். வேதாகமக் கருத்தின்படியாக ஒருவேளை அவர்கள் அவ்விதமானவர்களாய் இருக்கலாம் அல்லது ஒரு வேளை அவர்கள் அவ்விதமானவர்களாய் இல்லாது இருக்கலாம்.*

*"உபசரிப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "அன்பு"* (*philos*) *மற்றும் "அந்நியர்"* (*xenos*) *என்பதற்குரிய வார்த்தைகள் இணைந்த கூட்டு வார்த்தையாகும். இவ்விதமாய் அந்த கிரேக்க வார்த்தை "அந்நியரை அன்பு செய்பவர்" என்ற நேரடியான அர்த்தம் தருவதாயுள்ளது.* "hospitable" *என்ற ஆங்கில வார்த்தையும் கூட* "guest" *என்பதற்கான இலத்தீன் வார்த்தையில் இருந்தே* (hospes) *வருகின்றது. ஆங்கில வார்த்தையின் அர்த்தமானது அது மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையைக் காட்டிலும் பரந்ததாக உள்ளது. ஆபிரகாம் மூன்று மனிதர்களை உபசரித்ததலை சிறந்த*

உதாரணத்தை மறுபடியும் கவனியுங்கள்: அவர் அவர்களை இதற்கு முன்பு ஒருபோதும் சந்தித்ததில்லை; அவர்கள் அந்நியர்களாய் இருந்தார்கள்.

வேதாகமத்தில் உபசரிப்பு என்பது பதிலுக்குச் செய்யும் செய்கையல்ல; அது நமக்கு உபசரிப்பைத் திரும்பத் தரக்கூடிய நண்பர்களை உபசரிப்பதென்பதல்ல; அது விருந்து கொடுப்ப தென்பதல்ல. மாறாக, இது இரக்கத்தை மறுபடியும் திரும்பச் செலுத்தக்கூடிய வசதியோ வாய்ப்போ இல்லாதவர்களுக்கு இரக்கம் காட்டுதல் என்பதாக உள்ளது (மத். 5:46, 47ஐக் கவனிக்கவும்).

பழைய ஏற்பாடு முழுவதிலும், தேவன் அந்நியர்களுக்கு விசேஷித்த பராமரிப்பைத் தந்துள்ளார்:

> அந்நியனை ஒடுக்காயாக; எகிப்து தேசத்தில் அந்நியர்களா யிருந்த நீங்கள் அந்நியனுடைய இருதயத்தை அறிந்திருக்கிறீர் களே (யாத். 23:9).
>
> உன் திராட்சத் தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும், அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டு விடுவாயாக (லேவி. 19:10).
>
> உங்களிடத்தில் வாசம் பண்ணுகிற அந்நியனைச் சுதேசி போல எண்ணி, நீங்கள் உங்களில் அன்பு கூருகிறது போல அவனிலும் அன்பு கூருவீர்களாக; நீங்களும் எகிப்து தேசத்திலே அந்நியர் களாயிருந்தீர்களே (லேவி. 19:34).[1]

அந்நியர்களிடம் இரக்கம் காட்ட வேண்டும் என்ற கருத்தானது புதிய ஏற்பாட்டிலும் தொடர்ந்து வலியுறுத்தப் படுகின்றது: நியாயத்தீர்ப்பில் கர்த்தர் தம் வலது பக்கத்தில் இருப்பவர்களைப் பார்த்து; "அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்" (மத். 25:35இ) என்று கூறுவார், இடது பக்கத்தில் இருப்பவர்களைப் பார்த்து: "அந்நியனாயிருந் தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை" என்று கூறுவார் (மத். 25:43அ). விசேஷித்த பெண் ஊழியக்காரிகளின் தகுதிகளில் ஒன்றாக மறுபடியும், "அந்நியரை உபசரித்து" (1 தீமோ. 5:10) என்று கூறப்படுகின்றது.[2]

உபசரிப்பு என்பது, நாம் எல்லாருமே ஏதோ ஒரு

வேளையில் அந்நியர்களாயிருக்கும் உண்மையை அடையாளம் கண்டு கொள்வதாகும். நாம் எப்படி நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகின்றோமோ, அப்படியே நாம் மற்றவர்களை நடத்த வேண்டும். அந்நியராக, வெளியே இருந்து வந்தவராக இருப்பது என்பது எப்படிப்பட்டதென்பதை ஆபிரகாம் அறிந்திருந்தார். கானானில் குடியிருந்த மக்களிடத்தில் அவர் "நான் உங்களிடத்தில் அந்நியனும் பரதேசியுமாயிருக்கிறேன்" (ஆதி. 23:4) என்று கூறினார்.

நீங்கள் அந்நியராயிருக்கையில் சிந்தனை செய்யுங்கள். ஒரு வேளை நீங்கள்,

> ஒருபோதும் நான் படைக்காத இவ்வுலகில் நான் அந்நியனாய் அஞ்சுகிறேன்.

என்ற A.E. ஹவுஸ்மேன் என்ற கவிஞரின் Last Poems என்ற கவிதையில் வரும் வரிகளில் உள்ளது போன்ற நிலையில் இருக்கலாம். "நம்மில் ஒருபோதும் அந்நியராய் அல்லது தனிமையாய் இராதவர் யார்?" என்ற தாமஸ் வுல்ஃப் அவர் களின் கேள்வியுடன் நீங்கள் ஒத்துப் போகலாம். நாம் ஒவ்வொருவருமே "அந்நியராகவும் தனிமையிலும்" இருந்திருக் கின்றோம். ஆகையால் தனிமைப்படுத்தப்பட்டவர்களை நாம் அணுக வேண்டும், அவர்களுக்கு நாம் உதவ வேண்டும்.

உபசரிப்பு என்பதற்காக பழைய ஏற்பாட்டின் தலைசிறந்த உதாரணமாக இருப்பது ஆபிரகாமும் மூன்று அந்நியர்களும் என்ற நிகழ்ச்சியாயிருந்தால், புதிய ஏற்பாட்டில் இதற்கான தலை சிறந்த உதாரணமாகக் காணப்படுவது அப். நட. 28ல் வரும் நிகழ்ச்சியாகும். மெலித்தா தீவார் பவுலிடம் எவ்வளவு இரக்கம் காட்டினார்கள் என்ற பாடத்தைக் கற்பதன் மூலம் பல குழந்தைகள் வேதாகம உபசரிப்பைப் பற்றி அறிந்திருக் கின்றார்கள். பவுல் ரோமாபுரியைச் சென்றடையப்பட்ட இடர்ப்பாடுகளின் விபரங்களின் மத்தியில் அப். 28:1-15 பகுதியானது ஒரு இரத்தினமாக பிரகாசிக்கின்றது.

பவுலும், அவரது நண்பர்களும், அவரது கப்பல் கூட்டாளிகளும் மத்திய தரைக்கடலில் இருந்த சின்னஞ்சிறு தீவான மெலித்தாவுக்குச் சென்று சேர்ந்திருந்தார்கள். அதைத் தொடர்ந்து வந்த அடுத்த மூன்று மாதங்களை இலேசாக நாம்

*கவனித்தாலே (28:11) "அந்நியர்களை நேசித்தல்" என்பது பற்றிச் சில உதாரணங்களை நாம் காண்போம்.*

## *அந்தத் தீவார் அந்நியர்களிடம் இரக்கம் காட்டினார்கள் (28:1-7)*

*மெலித்தாவில் இருந்த யாரோ ஒருவர் மூழ்கிக் கொண்டிருந்த கப்பலைக் கண்டார். அதைப்பற்றி மற்றவர்களிடம் கூறிய பொழுது, அந்தத் தீவாரில் பலர் வந்து, கரையில் காத்துக் கொண்டிருந்தார்கள். கப்பற்சேதத்தில் அகப்பட்டவர்களைக் கொன்று, அவர்களின் உடைமைகளைக் கொள்ளையடிப்பது என்பது அந்தத் தீவாரின் பொதுவான வழக்கமாய் இருந்தது. இருப்பினும், "அந்நியராகிய அந்தத் தீவார் எங்களுக்குப் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல. அந்த வேளையில் பிடித்திருந்த மழைக்காகவும் குளிருக்காகவும் அவர்கள் நெருப்பை மூட்டி, எங்கள் அனைவரையும் சேர்த்துக் கொண்டார்கள்" (அப். 28:2) என்று லூக்கா குறிப்பிட்டார். கப்பலில் இருந்தவர்கள் அந்தத் தீவாருக்கு அந்நியர்களாய் இருந்தார்கள், ஆனால் அவர்கள் தேவையில் இருந்த அந்நியர்களாய் இருந்தார்கள். மெலித்தாவின் குடிமக்கள் உபசரிப்பை வெளிப்படுத்தினார்கள்.*

*அந்தத் தீவாருடைய உபசரிப்புக்கான முக்கிய காரணம் ஒன்று வசனம் 7ல் தெளிவாகின்றது: "தீவுக்கு முதலாளியாகிய புபிலியு ... எங்களை ஏற்றுக் கொண்டு, மூன்று நாள் பட்சமாய் விசாரித்தான்" என்று லூக்கா கூறினார். மெலித்தாவின் ஆளுநராய்[3] இருந்த புபிலியுவே உபசரிப்புத் தன்மையுள்ள மனிதராய் மற்ற குடிமக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார். உபசரிப்புத் தன்மையுள்ள மக்களை நீங்கள் காணும் பொழுது, உபசரிப்பின் அர்த்தம் என்னவென்று செயல்முறையில் காட்டும் ஒரு தலைவர் அவர்களுக்கு இருப்பது நீங்கள் காணும் மாறாத நிகழ்வாகும். 1 தீமோ. 3:2 மற்றும் தீத்து 1:8ன்படி கர்த்தருடைய சபையில் மூப்பர்கள் உபசரிப்புத் தன்மையுடன் இருக்க வேண்டும் என்று கூறப்படுவதற்கு இது ஒரு காரணமாகும். அவர்கள் உபசரிப்புத் தன்மை*

யுடையவர்களாய் இல்லாது போனால் சபையாரும் உபசரிப்புத் தன்மையுடன் இருக்க மாட்டார்கள்.

## பவுல் அந்நியர்களிடத்தில் இரக்கம் காட்டினார் (28:8-10)

அந்நியர்களுக்கு அன்பும் அக்கறையும் காட்டுபவர்களாய் இருந்தவர்கள் அந்தத் தீவார் மட்டும் அல்ல. பவுல் புபிலியுவின் வீட்டிற்குச் சென்ற பொழுது, புபிலியுவின் தகப்பனார் மெலித்தா காய்ச்சலினால் அவதிப்பட்டதை அறிந்தார்.[4] உடனே, "பவுல் அவனிடத்திற்குப் போய் ஜெபம் பண்ணி, அவன்மேல் கைகளை வைத்து, அவனைக் குணமாக்கினான்" (வ. 8ஆ). குணமாக்கப்பட்ட செய்தி பரவிய போது, அந்தத் தீவு முழுவதிலும் இருந்த நோயாளிகள் பவுலினிடத்தில் வந்து (ஒருவேளை அவர்கள் மருத்துவரான லூக்காவிடத்திலும் வந்திருக்கலாம்) குணம் பெற்றார்கள் (வ. 9).

பதில் பலன் பெறுவது என்பது உபசரிப்பின் நோக்கம் அல்ல, ஏனென்றால் உபசரிக்கப்படுகின்றவர்கள் பெரும்பாலும் பதில்செயல் செய்வதற்கு வசதிகளோ வாய்ப்புக்களோ பெற்றிருப்பதில்லை. இருப்பினும் சில வேளைகளில் உதவி யானது இரு வழிகளிலும் பெருக்கெடுத்தோடுகின்றது - அவ்வாறு நடக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்ட தாயிராமல், அது தானாகவே அவ்வாறு நடப்பதாயிருக்கின்றது. பவுல் தமக்கு உதவி செய்தவர்களுக்கு உதவி செய்ய முடிந்தது. மற்றும் அந்தத் தீவார் "எங்களுக்கு அநேக மரியாதைகள் செய்து" (வ. 10அ) என்று லூக்கா குறிப்பிட்டார். பிறகு அவர், "நாங்கள் கப்பல் ஏறிப் போகிற போது எங்களுக்குத் தேவையானவைகளை ஏற்றினார்கள்" (வ. 10ஆ) என்று கூறினார். பவுலும் அவரது கூட்டாளிகளும் தங்கள் முதுகு களில் சிறிதளவே உடைகளுடன் கரை சேர்ந்திருந்தார்கள்; மெலித்தாவின் நன்றி நிறைந்த குடிமக்களோ அவர்கள் ரோமாபுரிப் பயணத்தைத் தொடருவதற்குத் தேவையான யவற்றையும் கொடுத்தார்கள்.

# சகோதரர்கள் அந்நியர் ஒருவருக்கு இரக்கம் காட்டினார்கள் *(28:11-15)*

*''அந்நியர்'' என்ற வார்த்தையை அதன் பொதுவான அர்த்தத்தில் நாம் பயன்படுத்தியிருக்கின்றோம்: இதற்குமுன் நாம் சந்தித்திராத ஒருவர், நாம் உறவு முறை பெற்றிராத ஒருவர். சில வேளைகளில் இவ்வார்த்தையானது ஆறுதல் தேவைப்படுகின்ற தேவனுடைய பிள்ளைகளைக் குறிப்பதற்காக வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக, லேவியராகமம் 25:35ல் மோசே, "உன் சகோதரன் தரித்திரப்பட்டு, கையிளைத்துப் போனவனானால், அவனை ஆதரிக்க வேண்டும்; பரதேசியைப் போலும் தங்க வந்தவனைப் போலும் அவன் உன்னோடே பிழைப்பானாக'' என்று எழுதினார். மறுபடியும், புதிய ஏற்பாட்டில் யோவான், "நீ சகோதரருக்கும் அந்நியருக்கும் செய்கிற யாவற்றையும் உண்மையாய்ச் செய்கிறாய்'' என்று (3 யோவா. 5) சகோதரருக்கு உதவுதல் பற்றிப் பேசினார்.*

*பவுல் ரோமாபுரிக்குச் செல்லும் வழியில், இதற்கு முன் தாம் கண்டிராத சகோதரர்களைச் சந்தித்தார் - அவரை அவர்கள் ஏற்றுக் கொண்டு ஆறுதல் படுத்தினார்கள். வசனம் 15ல், "அவ்விடத்திலுள்ள சகோதரர்கள் நாங்கள் வருகிற செய்தியைக் கேள்விப்பட்டு, சிலர் அப்பியுபுரம் வரைக்கும், சிலர் மூன்று சத்திரம் வரைக்கும், எங்களுக்கு எதிர்கொண்டு வந்தார்கள்; அவர்களைப் பவுல் கண்டு, தேவனை, ஸ்தோத்தரித்துத் தைரியமடைந்தான்" என்று கூறப்படுகின்றது.*

*''அந்நியர்'' என்பதின் விரிவான இக்கருத்தைப் பயன்படுத்தி, நாம் அறிந்திராத ஆனால் அறிய வேண்டியுள்ள பலரைப் பற்றியும் நாம் ஒருவேளை நினைத்துப் பார்க்க முடியும் - நமது சமூகங்களில், நமது பணியிடங்களில், நாம் ஆராதிக்கும் சபைகளில் மற்றும் ஒருவேளை நமது சொந்த வீட்டிலும் கூட[5] நாம் உதவி செய்து ஆறுதல் படுத்தத் தேவையான மக்கள்!*

# *முடிவுரை*

*வேதாகம உபசரிப்பு பற்றி நிறைவாக நாம் சில கருத்துக் களைக் கவனிப்போம்:*

*(1) உபசரிப்பு என்பது - ஆபிரகாம் செய்தது போலவே - மக்களை நாம் வீடுகளுக்கு வரவழைத்து உணவு கொடுப்பதாக இருக்க முடியும், மற்றும் பெரும்பாலும் இப்படியாகவே இருக்கின்றது, ஆனால் இத்துடன் அது முடிவடைவதில்லை. ''அந்நியரை நேசிப்பவர்'' என்பது நமது நிலையாக இருக்க வேண்டுமென்றால், மற்றவர்களின் தேவைகள் பற்றிய உணர்வு பெற்று அவர்களின் தேவைக்கு உதவி தர வேண்டும். இந்தப் பாடத்தில், அனலூட்டும் நெருப்பு, தங்கும் இடம், ஆரோக்கியம் மற்றும் ஆறுதல் போன்ற பலவகைத் தேவை களுடன் கூடிய அந்நியர்களை நாம் கண்டோம். அப். 28ன் ''அந்நியரை நேசிப்பவர்கள்'' இந்தத் தேவைகளை நிறை வேற்றக் கூடிய அளவு இரக்கமுள்ளவர்களாயிருந்தார்கள்.*

*(2) உண்மையான உபசரிப்பு என்பது அளிக்கும் உதவியின் அளவீட்டின்படி வெளிப்படுத்தப்படுவதில்லை, ஆனால் அளிக்கும் உதவியில் உள்ள இதமான தன்மையில்தான் வெளியாகின்றது. வரம்பு கடந்த அளவு உபசரிப்புள்ளவர் களாய் இருக்க வேண்டும் என்பது வேறு எந்தக் காரணியைக் காட்டிலும் அதிகமாக உபசரிப்பு குணத்தை உற்சாகம் குறையச் செய்துள்ளது. ஒரு பெண்மணி, ''உபசரிப்பு என்றால், தயாரிப்புகளில் என்னையே ஏறக்குறைய கொன்று விடுவது என்ற தவறான கருத்து என்னிடத்தில் இருந்ததால், விருந்தினர் கள் வரும்பொழுது கதவண்டையில் சென்று பதில் கொடுப்பதற்குப் பதில், கட்டிலில் சென்று படுத்துறங்கவே அதிக விருப்பமுடையவளாய் நான் உணர்ந்தேன்'' (*Beverly LaHaye, *"The Spirit Controlled Women"* என்ற நூலில் இருந்து). நமது வேதவசனப் பகுதியில் காணப்படும் உபசரிப்பின் வெளிப்பாடுகள் பலவற்றுக்கு விலைமதிப்பு எதுவும் இல்லாமலோ அல்லது சிறிதளவே விலைமதிப்புள்ளதாக வோதான் இருக்கின்றது - கப்பற்சேதத்தில் இருந்து தப்பித்து, கடுங்குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தவர்கள் குளிர் காய நெருப்பு மூட்டுதல், அப்பியுபுரம் வரை பயணம் செய்து*

*பவுலை வாழ்த்துதல் முதலியன - ஆனால் இவைகளைப் பெற்றவர்களுக்கு இவைகள் விலைமதிப்பற்றவைகளாய் இருந்தன.*[6]

*(3) உபசரிப்பு என்பது உடைமைகளைப் பகிர்ந்து கொள் வதைக் காட்டிலும் அதிகமாய் உங்களையே பகிர்ந்து கொள் வது என்பதாகும்.* Henri H.M. Nouwen *என்பவர் Reaching out என்ற தம்முடைய நூலில் "உபசரிப்பு என்பது அந்நியர்களை நமது நண்பர்களாகும்படி வரவேற்கும் சுதந்திரமான நட்புறவுள்ள இடைவெளியாகும்'' என்று விளக்கம் தந்திருக்கின்றார். விருந்தினர் வந்த வேளையில் களைப்படைந்து விட்டதாகச் சற்று முன் அறிக்கையிட்ட பெண்மணி பின்வரும் பாடத்தைக் கற்றுக் கொண்டார்: "[உபசரிப்பின்] முக்கிய நோக்கம் உங்கள் விருந்தினர்களுக்கு உணவளிப்பதல்ல - அவர்கள் தங்கள் வீடுகளிலேயே உணவு உண்ண முடியும். உணவைக் காட்டிலும் உங்களில் - உங்கள் அன்பில், உங்கள் இரக்கத்தில், உங்கள் பெருந்தன்மையில் - ஒரு பகுதியை பகிர்ந்து கொள்வதில் உங்கள் விருப்பம் முக்கியமானதாகும் - உங்களிடமிருந்து மட்டுமே உங்கள் விருந்தினர்கள் இதைப் பெற்றுக் கொள்ள முடியும்!"*

*இந்தப் பாடத்திற்கு நான் "உபசரிப்பு என்ற உவகையூட்டும் கலை'' என்று தலைப்பிட்டுள்ளேன். நம்மில் சிலருக்கு இது "உபசரிப்பு என்ற இழந்து போன கலை" என்று தலைப்பிடப் பட்டிருக்க வேண்டுமா? நாம் ஒவ்வொருவரும் "அந்நியரிடம் அன்பு காட்டுபவர்களாய்'' இருப்பதற்குத் தேவன் உதவி செய்வாராக.*

---

குறிப்புகள்

*[1]உபாகமம் 26:12; யோபு 31:32; சங். 146.9; எரே. 22:3; சகரியா 7:10 ஆகியவற்றையும் காணவும். அந்நியர்களிடத்தில் இருந்து ஆதாயம் அடைவதை பழைய ஏற்பாடு எச்சரிக்கை செய்கின்றது (சங். 109:11; நீதி. 11:15 முதலியன). நாம் உபசரிப்புத் தன்மை உள்ளவர்களாய் இருக்க வேண்டும்; நாம் ஏமாற்றுபவர்களாய் இருக்கக் கூடாது. [2]இவர்கள் சபையில் ஊழியம் செய்ய அர்ப்பணித்திருந்த விதவைகளானபடியால், சபையால் தாங்கப்பட்டார்கள். இந்த வசனம் வேதாகமத்தில் ''உபசரிப்பு" என்ற*

*வார்த்தையை உபயோகித்திருந்தாலும், நான் முந்தின குறிப்புகளில் இந்த வசனத்தைச் சேர்க்கவில்லை. ஏனெனில் "உபசரிப்பு" என்று மொழி பெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை, "அந்நியரை நேசித்தல்" என்பதற்குப் பதில் "அந்நியரை மகிழ்வித்தல்" என்று அர்த்தப்படுகிறது. [3]"அப்போஸ் தலருடைய நடபடிகள்" 5ம் பாகத்தில் காணவும். [4]"அப்போஸ்தலருடைய நடபடிகள்" 5ம் பாகத்தில் காணவும். [5]இப்பாடத்தை நடைமுறைக்குரிய தாக்குவதற்கு இவ்விடத்தில் உள்ளூர்ச் சூழ்நிலைகள் குறிப்பிடப்பட வேண்டும். [6]இவ்விடத்தில் பயன்படுத்தப்படும் எடுத்துக்காட்டுகள் கேட்பவர்களுக்கு அர்த்தமுள்ளதாயிருக்க வேண்டும்.*